# கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

## விவசாய டிப்ளோமா கற்கை நெறி – 2020/2021
## (Diploma in Agriculture) (SLQF 3)
## வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்

கிழக்குப் பல்கலைக்கழக விவசாய பீடத்தில் விவசாய டிப்ளோமா கற்கை நெறிக்காக கல்வியாண்டு 2020/2021 இற்கான விண்ணப்பங்கள் வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையத்தினால் தகுதிவாய்ந்த விண்ணப்பதாரிகளிடமிருந்து கோரப்படுகின்றன.

**தகமைகள்**

**அ.** கா.பொ.த (உயர்தரப்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன் கா.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் விவசாயம் அல்லது விஞ்ஞான பாடத்தில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

**அல்லது**

**ஆ.** NVQ தரம் 4 விவசாய பாடநெறி ஒன்றில் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்

**அல்லது**

**இ.** ஒரே அமர்வில் விவசாயம் அல்லது விஞ்ஞான பாடம் உள்ளடங்கலாக ஆகக்குறைந்தது 06 பாடங்களில் கா.பொ.த (சாதாரண தரம்) பரீட்சையில் சித்தியடைந்திருப்பதுடன், விவசாயம் சார்ந்த அரச அல்லது அரச சார்பற்ற நிறுவனத்தில் குறைந்தது இரண்டு வருடங்கள் தொழில் அனுபவத்தையும் பெற்றிருத்தல் வேண்டும்.

| | |
|---|---|
| **பாடநெறிக் கட்டணம்** | : **ரூபா 54,000 (இரண்டு தவணைகள் மூலம் செலுத்தலாம்)** |
| **தெரிவு** | : **நேர்முகப்பரீட்சை மூலம்** |
| **காலம்** | : **ஒரு வருடம்** |
| **கற்பித்தல் மொழி** | : **தமிழ்** |

**விண்ணப்பிக்கும் முறை**

விண்ணப்பதாரிகள் http://www.cedec.esn.ac.lk/dipagri என்ற வலைத்தளத்திலுள்ள நிகழ்நிலை விண்ணப்பப்படிவத்தினூடாக விண்ணப்பிக்க வேண்டும். மேலும் இதனுடன் தொடர்புடைய ஆவணங்களையும், நிதியாளருக்கு விலாசமிடப்பட்டு மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரூபா 1000/= பணம் செலுத்திய பற்றுச்சீட்டின் பல்கலைக்கழக பிரதியையும் scan செய்து மேற்கூறிய வலைத்தளத்தில் தரவேற்றம் செய்ய வேண்டும்.

பணம் வைப்பிலிடவேண்டிய கணக்கிலக்கம் **227-1-001-9-0000-390**, மக்கள் வங்கி, செங்கலடி கிளை.

அத்துடன் விண்ணப்பதாரிகள் அச்சடிக்கப்பட்ட விண்ணப்ப படிவத்தை நிரப்பி இதனுடன் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் நிழல் பிரதியுடன், பணம் வைப்பிலிட்ட பற்றுச் சீட்டின் பல்கலைக்கழக பிரதியினையும் இணைத்து சுயவிலாசம் இடப்பட்ட ரூபா 45/= பெறுமதி உள்ள முத்திரை ஒட்டப்பட்டதுமான கடித உறை ஒன்றையும்

**உதவிப்பதிவாளர்,**
**வெளிவாரிப் பட்டங்கள் மற்றும் விரிவாக்கல் கற்கைகள் நிலையம்,**
**கிழக்கு பல்கலைக்கழகம்,**
**இலங்கை,**
**வந்தாறுமூலை,**
**செங்கலடி**

எனும் விலாசத்திற்கு 05.01.2022 ஆம் திகதிக்கு முன்னதாக பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

மேலும் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் **"விவசாய டிப்ளோமா கற்கை நெறி – 2020/2021"** என்பதை குறிப்பிடுதல் வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத்திகதி: 05.01.2022**

மேலதிக தகவலுக்கு
தொலைபேசி இல : 0652240972
மின் அஞ்சல் : cedecinfo@esn.ac.lk
Web : http://www.cedec.esn.ac.lk

குறிப்பு: நாட்டின் பெருந்தொற்று காரணமாக மேற்படி பட்டப்படிப்புகள் தொடர்பாக மாற்றங்கள் ஏற்படின் அவை மேற்குறிப்பிடப்பட்ட பல்கலைக்கழக இணையத் தளத்தில் குறிப்பிடப்படும்.

**பதிவாளர்**
**கிழக்கு பல்கலைக்கழகம், இலங்கை**
**வந்தாறுமூலை,**
**செங்கலடி**
**இலங்கை.**
05.12.2021